# தமிழ் கற்று, அறிவு பெற்று, அதி சிறந்த வாழ்க்கை முறையை உருவாக்குங்கள்

## Learn Tamil, acquire knowledge and create a best way of life

வெளிநாடுகளில் பிறந்த பல தமிழர்கள் தமிழ் மொழியைப் படித்ததில்லை. இதனால் தமிழில் எழுதப்பட்ட சைவ சித்தாந்தம், திருக்குறள், தமிழ் கலாசாரம் மற்றும் வரலாறு தொடர்பான நூல்களை வாசித்து நிறைவான அறிவை பெற்று, தங்கள் செயல்களைச் செம்மைப் படுத்தி, வாழ்க்கையை நெறிப்படுத்தி, மனதைப் பக்குவப் படுத்த முடியாமல் துன்பப்படுகின்றார்கள். இதன் விளைவாக அதி சிறந்த வாழ்க்கையை அமைக்க முடியாமல் இருக்கின்றார்கள். இதை மாற்றி அமைக்க தமிழைக் கற்று அதைச் சரளமாக வாசிக்க, பேச, மற்றும் எழுதக் கூடியவர்களாக மாறி தமிழ் நூல்களில் இருந்து போதிய அறிவைப் பெற வேண்டும்.

Version 1 by E. Logeswaran, Researcher, 19. 06.20

| தமிழ் | | | |
|---|---|---|---|
| முத்தமிழ் (மூன்று தமிழ்) | பகுதி Parts | அர்த்தம் Meaning | |
| இயல்தமிழ் | இலக்கணம் Grammar | வாக்கியங்களை அமைக்க, சொற்களை இணைத்துக்கொள்ளும் வழிகள் தொடர்பான ஒரு மொழியின் விதிகள் | Rules of a language relating to ways of combining words to form sentences |
| | இலக்கியம் Literature | குறிப்பிட்ட பொருள் பற்றிய நூல், காப்பியம், தலபுராணங்கள், நாவல்கள், கவிதை | Books, epics, legends, novels, poetry about a particular subject |
| இசைத்தமிழ் | இசை Music | மக்கள் இசைக்கருவிகளை வாசித்து அல்லது பாடுவதின் மூலம் நிகழ்த்தும் ஒலி வடிவங்கள் | Sound patterns that people perform by playing musical instruments or singing |
| நாடகத்தமிழ் | நாடகம் Drama | மேடை, வானொலி போன்றவற்றில் கதை ஒன்றினை அல்லது நிகழ்வு ஒன்றினை நடிப்பு மூலமாகக் காட்டும் கலை வடிவம் | An art form that shows a story or event on stage, radio, etc. through acting |

# வெளிநாட்டில் பிறந்த தமிழர்கள் தமிழ் படிப்பதனால் அடையக்கூடிய நன்மைகள்

1. தமிழ்மொழி உலகின் மூத்தமொழி, அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழியாகத் தகுதி வாய்ந்தது மற்றும் உலக அறிஞர்களால் மதிக்கப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. இது தமிழர்களுக்கு பெருமை கொடுக்கின்றது.

2. தமிழில் எழுதப்பட்ட சைவ சித்தாந்தம், திருக்குறள், கலாசாரம் மற்றும் வரலாறு தொடர்பான நூல்களை வாசித்து நிறைவான அறிவைப் பெற்று அதி சிறந்த வாழ்க்கையை அமைத்து நல்லவராக வாழ முடியும்.

3. தமிழ் மொழியில் உள்ளதுபோல் நீதி நூல்களும், இலக்கியங்களும், ஆன்மிக நூல்களும் பிற உலக மொழிகளில் இல்லை. அவை நம் செயல்களைச் செம்மைப் படுத்தும்; வாழ்க்கையை நெறிப்படுத்தும்; மனதைப் பக்குவப் படுத்தும்.

4. தாங்கள் தேர்ந்தெடுக்கும் துறையில் அதி உயர் நிலைக்கு நகர்ந்து, அதிகாரம் உள்ளவர்களாக மாறி, உலகளவில் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்களாக வளர வேண்டும் என்ற வேகத்தையும் விவேகத்தையும் பழந்தமிழ் நூல்களில் இருந்து பெறும் அறிவு கொடுக்கும்.

5. உலகில் வேறெங்கும் காணக் கிடைக்காத மற்றும் தமிழில் எழுதப்பட்ட மூலிகை (சித்த) வைத்தியம், மூச்சுக் கலை மற்றும் யோகப் பயிற்சிகள் என்பவற்றைப் படித்து, பயன்படுத்தி, ஆரோக்கியமாக வாழ்க முடியும்.

6. தமிழ் பாடல்களைக் கேட்டு பாடலின் அர்த்தத்தைப் புரிந்து இசையை ரசித்து தினமும் மகிழ்ச்சி அடைய முடியும்.

7. தமிழ் பள்ளிகளை நடத்தி, ஒரு முத்தமிழ் ஆசிரியராக வேலை செய்து, இயல், இசை மற்றும் நாடகம் என்பவற்றை தமிழர்களுக்குக் கற்பித்து முத்தமிழில் பாண்டித்தியம் பெறச் செய்ய முடியும்.

8. செம்மொழியாகிய தமிழ் மொழியை கேட்டு, வாசித்து, புரிந்து, எழுதி, கருத்துப்பரிமாறி, விவாதம் செய்து, அடுக்கு மொழி பேசி பெருமை கொண்டு மனநிறைவு அடைய முடியும்.

9. தாய் மொழியாகிய தமிழ் மொழி அறிவு உள்ள பிள்ளைகளால் ஆங்கிலத்தையும் வேறு மொழிகளையும் மிக இலகுவாகக் கற்க முடியும்.

10. தமிழைத் தவிர வேறு எந்த மொழிகளையும் அறியாத தற்போதைய மற்றும் எதிர்கால தமிழர்களுடன் தொடர்பு கொண்டு பரஸ்பர நன்மை பயக்கும் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

11. தலைமுறை தலைமுறையாக தமிழ் மொழியை கொண்டு சென்று தனது குடும்பம் மற்றும் இனத்தின் தமிழ் அடையாளத்தை பாதுகாக்க முடியும்.

12. பிற இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் நாட்டில் பிறந்த தமிழர்களை எல்லா சூழ்நிலைகளிலும் ஏற்றுக் கொள்ளாவிட்டால், தமிழ் அடையாளத்துடன் கூடுதலாக வாழ்பவர்களின் நாட்டில் சென்று வாழும் வாய்ப்புகளை பயன்படுத்த முடியும்.

| தமிழ் கற்கும் வாய்ப்பை மதிப்பிடுதல். உதாரணமாக: | |
|---|---|
| 1. மாணவியின் வயது | பத்து |
| 2. மாணவிக்குத் தமிழ் மொழி தெரியுமா? | தெரியாது |
| 3. தமிழைப் பேச, வாசிக்க மற்றும் எழுத உள்ள காலம் | மூன்று வருடங்கள் |
| 4. கற்க கிடைக்கும் நேரம் | வாரத்தில் இரண்டு மணி நேரம் |
| 5. பேசும் வாய்ப்பு | கற்கும் போது மட்டுமே |
| 6. கற்கும் திறன் | மிகவும் நல்லது |
| 7. கற்க விருப்பம் | நல்லது |

# குறிப்பிட்ட மாணவியின் தமிழ் கற்கும் வாய்ப்பின் அடிப்படையில் திட்டம்

| 3 ஆண்டுகளுக்குள் தமிழை கேட்க, வாசிக்க, எழுத மற்றும் பேச வேண்டும் | | | | | |
|---|---|---|---|---|---|
| எண் | Activities செயல்பாடுகள் | | Subjects பாடங்கள் | | முத்தமிழ் |
| 1 | உச்சரித்தல் | Prouncing | Alphabets | எழுத்துக்கள் | இலக்கணம் |
| 2 | வாசித்தல் | Reading | News, Books | செய்தி, நூல் | |
| 3 | எழுதுதல் | Writing | Words, Sentences | சொற்கள், வாக்கியங்கள் | |
| 4 | பேசுதல் | Speaking | Daily talk | தினசரி பேச்சு | |
| 5 | பெறுதல் | Acquiring | Knowledge | அறம், பொருள், இன்பம் | இலக்கியம் |
| 6 | கேட்டல் | Hearing | Music | கர்நாடக இசை | இசை |
| 7 | பார்த்தல் | Seeing | Dance | பரதநாட்டியம், கூத்து | நாடகம் |
| மேலே குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் முன்னேற்றத்தை மதிப்பிடுங்கள் | | | | | |

முதலில் தினமும் பயன்படுத்தும் சொற்களைப் பாவித்து, தமிழைக் கற்றுக்கொள்ளுங்கள்

# தமிழைப் படிக்க வையுங்கள்

சைவ சித்தாந்தம், திருக்குறள், கலாசாரம் மற்றும் வரலாறு தொடர்பான நூல்கள் அதி சிறந்த வாழ்க்கையை அமைக்க உதவும். இந்த நூல்கள் தமிழில் எழுதப்படுள்ளது. இதிலிருந்து முழுமையான அறிவைப் பெற தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற வேண்டும். இந்த நூல்களில் சொல்லப்பட்ட முக்கியமான சிலவற்றை விளங்கும் மொழியில் (எ.கா. ஆங்கிலம்) மிகவும் சுருக்கமாக அறிமுகம் செய்து, ஆர்வமூட்டி, தமிழைப் படிக்க வையுங்கள்.

**தொலைநோக்கு:** தமிழர்கள் தமக்கு என அதி சிறந்த வாழ்க்கை முறையை உருவாக்குவார்கள்

**குறிக்கோள்:** தமிழ் கற்று அறிவு பெறுங்கள்

**இலக்கு1:** தமிழில் பாண்டித்தியம் பெறுங்கள்

- உச்சரித்தல்
- வாசித்தல்
- எழுதுதல்
- பேசுதல்
- பெறுதல்
- கேட்டல்
- பார்த்தல்

**இலக்கு2:** சைவ சித்தாந்தத்தை கற்றுணருங்கள்

- கடவுள்
- உயிர்
- உடம்பு
- உலகம்
- முற்பிறப்பு
- இப்பிறப்பு
- மறுபிறப்பு
- இறப்பு
- நற்செயல்
- தீயசெயல்
- ஆணவம்
- வாழ்க்கை
- இன்பம்
- துன்பம்
- அன்பு
- வணங்கல்
- தொண்டு
- பூசை
- கருணை
- முத்தி

**இலக்கு3:** திருக்குறளில் தேர்ச்சி பெறுங்கள்

- அறம்
- பொருள்
- இன்பம்

**இலக்கு4:** கலாசாரத்தை விளங்குங்கள்

- மொழி
- சின்னம்
- விழுமியம்
- நம்பிக்கை
- விதிமுறை
- சட்டம்:
- வழக்கம்,
- நடைமுறை,
- பழக்கம்.
- எதிர்பார்ப்பு
- அறிவு,திறன்,பங்கு
- ஆக்கப் பொருள்

**இலக்கு5:** வரலாற்றை தெரிந்திருங்கள்

- குமரிக்கண்டம்
- தமிழ்ச் சங்கம்
- தமிழ் மொழி
- தமிழ் நாடு
- இலங்கை
- இந்தியா
- பாண்டியன்
- சோழன்
- சேரன்
- சைவம்
- சமணம்
- இஸ்லாம்
- பௌத்தம்
- கிறித்துவம்
- இந்து மதம்
- தமிழர்கள்
- முஸ்லீம்கள்
- சிங்களவர்கள்
- சிங்கள மொழி
- திரிவுபடுத்தல்

தமிழ் கற்பிக்கும் போது பயன்படுத்தக்கூடிய சில சொற்கள் தரப்பட்டுள்ளன.
இவற்றை விளக்கி இலக்குகளை அடைய வையுங்கள்